# DIOCESAN CIRCULAR LETTERS

No. C.19/2021 16.11.2021

## உலக ஆயர்கள் மாமன்றம் 2021-2023
### இணைந்துப் பயணிக்கும் திருஅவையாக
### ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு

கிறிஸ்துவின் அன்பிற்கினிய இறைமக்களே,

நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் அறிவிக்கப்பட்டு கடந்த அக்டோபர் மாதம் மறைமாவட்டங்கள் அளவில் தொடங்கியிருக்கும் 16-ஆம் ஆயர்கள் மாமன்றம் குறித்து இச்சுற்றுமடலை நமது மறைமாவட்ட இறைமக்களுக்குத் தருவதில் உளம் மகிழ்கின்றேன்.

இதற்கு முன் திருஅவையில் நடந்தேறிய ஆயர்கள் மாமன்றங்களை விட மாமன்றம் 2021-2023 மிகவும் வித்தியாசமானது. காரணம், நமது திருத்தந்தை கூறுவது போல, இம்மாமன்றத்தின் நோக்கமும் அதைச் செயல்படுத்துவதற்கான விரிவான கலந்துரையாடல்களும் மீண்டும் சில ஆவணங்களை உருவாக்க அல்ல. மாறாக, திருஅவையின் பணியிலும் வாழ்விலும் அடிமட்ட அளவில் வித்தியாசமான செயல்முறைகளையும் அமைப்பு முறைகளையும் உருவாக்கவே்

இக்கலந்துரையாடல் அனைத்து மக்களிடமும் நம்பிக்கையை விதைக்கவும் இறைவாக்குரைத்தலையும் இலட்சியக் கனவுகளையும் வெளிக்கொணர்ந் திடவும் எதிர்நோக்கு தழைப்பதற்கானச் சூழலை உருவாக்கிடவும் நம்பிக்கையால் பிறரை ஆட்கொள்ளவும் காயங்களைக் குணமாக்கிடவும் உறவுகளைச் செம்மைப்படுத்திடவும் புதிய நம்பிக்கைக் கீற்றுகளை வழங்கிடவும் ஒருவர் மற்றவரிடமிருந்து கற்றுக்கொள்ளவும் செழுமையான மனித வளங்களைக் கண்டுகொள்ளவும் அன்பு நிறைந்த இதமான இதயங்களை உருவாக்கிடவும் உதவ வேண்டும் என்பதே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் விருப்பம் (மாமன்ற தயாரிப்பு ஏடு எண் - 32). இவ்வகையில் இம்மாமன்றம் உலகின் கடை கோடியில் இருக்கும் மக்களின் குரலுக்குச் செவிமடுத்து, எல்லாரையும் ஒருங்கிணைத்து பங்கேற்க வைத்து, உலகிற்கெல்லாம் நற்செய்தியாக மாற அனைவருக்கும் தரப்படும் அருளின் கொடையாகும்.

**மாமன்ற தொடக்கவிழா**

திருத்தந்தையின் அழைப்பிற்கிணங்க இம்மாமன்ற தொடக்க விழா நம் மறைமாவட்டத்தில் 31-10-2021 ஞாயிறன்று மாலை 06.00 மணிக்கு கோட்டாறு சவேரியார் பேராலயத்தில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. காலச்சூழலை மனதில் கொண்டு இறைமக்கள் பகராளிகள்,

அருள்பணியாளர்கள் மற்றும் துறவியர் பகராளிகள் என சுமார் 500 பேர் கலந்து கொண்ட விழாவில் மாமன்றத்தின் நோக்கம், மையச்சிந்தனை, செய்ய வேண்டியவை பற்றி தெளிவாகப் புரியும் விதத்தில் அனைத்து நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சிறப்பாக ஏற்பாடுகள் செய்து நடத்திய அத்தனைப் பேருக்கும் சிறப்பாக நன்றியும் பாராட்டுகளும் கூறிக்கொள்கின்றேன்.

கோட்டாறு மறைமாவட்டத்தில் அடுத்தடுத்து நடைபெற இருக்கின்ற மாமன்ற செயல்பாடுகள் பற்றி உங்களிடம் இம்மடல் வழியாகப் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன். இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை நமக்குத் திருத்திய வழித்தடம் ஒன்று அனுப்பியுள்ளார்கள். அதன்படி நமது மறைமாவட்டத்தில் பின்வரும் 3 கட்டங்களாக மாமன்ற செயல்பாடுகள் நடைபெறும்.

**முதல்கட்டம்:-**

**செய்தி பரவலாக்கம் மற்றும் கலந்துரையாடலுக்கானத் தயாரிப்பு**

**(ஜனவரி 15, 2022 வரை)**

இந்த முதல் கட்டத்தில் மறைமாவட்ட மைய ஒருங்கிணைப்புக் குழுவிலிருந்து 5 கருத்தாளர்கள் பின்வரும் 5 தலைப்புகளில் பயிற்சியளிக்க உருவாக்கப்படுவார்கள்.

1. மாமன்றம் 2021-2023: விளக்கம் - ஆயர் நசரேன் சூசை
2. சமூகத்திலும் திரு அவையிலும் காணும் காலத்தின் அறிகுறிகள் - பணி. வி. ஹிலேரியஸ் (மறைமாவட்ட முதன்மை அருள்பணியாளர்)
3. இணைந்துப் பயணித்தல் என்றால் என்ன? பணி. தே. அல்போன்ஸ்
4. 10 கருப்பொருட்களும் வினாக்களும் - பணி. S.P. ஜாண்சன்
5. ஒன்றிணைந்த பயணம் எவ்வாறு நடைபெற வேண்டும் - பணி. வின்செண்ட் B. வில்சன்

இவர்கள் நவம்பர் 20 சனிக்கிழமை காலை 09.00 மணி முதல் மாலை 04.00 மணிவரை ஒவ்வொரு மறைவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பேர் கொண்ட 60 பேர் மற்றும் மறைவட்ட முதல்வர்கள், மைய ஒருங்கிணைப்புப் குழுவினர் ஆகியோருக்கு ஆயர் ஆரோக்கியசாமி அருள்வாழ்வு மையத்தில் வைத்து பயிற்சியளிப்பார்கள். பயிற்சி பெற்ற சுமார் 70 பேர் ஒவ்வொரு மறைவட்டத்திலும் சென்று அன்பிய ஒருங்கிணையம், பங்கு அருட்பணிப் பேரவை, திருத்துாதுக் கழகங்கள், இயக்கங்கள், பிற குழுக்கள், பிற சபையைச் சார்ந்தவர்கள், பிற சமயங்களைச் சார்ந்தவர்கள் ஆகிய குழுக்களுக்கு இப்பயிற்சியை வழங்குவார்கள். இதனால் காலத்தின் அறிகுறிகள், மாமன்றத்தின் தேவை, நோக்கம், இணைந்துப் பயணிக்கும் திருஅவை பற்றிய விளக்கம் மற்றும் கலந்துரையாடலுக்கான கருப்பொருள் போன்றவை அனைத்தும் தெளிவாக்கப்படும்.

நமது மறைமாவட்ட அருள்பணியாளர்கள் மற்றும் மறைமாவட்டத்தில் பணிபுரியும் இருபால் துறவியர் மத்தியில் விழிப்புணர்வையும் ஈடுபாட்டையும் உருவாக்கும் விதத்தில் பின்வரும் பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன:

1. 04.12.2021, சனிக்கிழமை, பிற்பகல் 02.00 முதல் 06.00 மணி வரை.
   கோட்டாறு, முட்டம் மறைவட்டங்கள்
   இடம்: அருள்வாழ்வு இல்லம்.
2. 11.12.2021, சனிக்கிழமை, பிற்பகல் 02.00 முதல் 06.00 மணி வரை.
   ஆலஞ்சி, குளச்சல் மறைவட்டங்கள்
   இடம்: குளச்சல் காணிக்கை மாதா மண்டபம்.
3. 11.12.2021, சனிக்கிழமை, பிற்பகல் 02.00 முதல் 06.00 மணி வரை.
   கன்னியாகுமரி, தேவசகாயம் மவுண்ட் மறைவட்டங்கள்.
   இடம்: அருள்வாழ்வு இல்லம்.

மாமன்றம் 2021-2023 வெற்றி பெற வேண்டுமென்றால் அருள்பணியாளர்களும் துறவியரும் முன்னின்று இதை வழிநடத்த வேண்டும். எனவே இப்பயிற்சிகளில் அனைத்து அருள்பணியாளர்களும் துறவியரும் கலந்து கொண்டு தங்களைத் தயாரிக்க மறைவட்ட முதல்வர்கள் ஆவன செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**இரண்டாம் கட்டம் : பங்கு மாமன்றம்**

**கலந்துரையாடல் : (சந்தித்தல், உரையாடல், தேர்ந்து தெளிதல்)**

**(ஜனவரி 15 முதல் ஏப்ரல் 10, 2022 வரை)**

இரண்டாம் கட்டத்தில் பங்கு அருள்பணியாளர் பங்கு அருள்பணிப் பேரவையுடன் கலந்தாலோசித்து ஒரு பங்கு மாமன்ற குழுவையும் ஒரு தொடர்பாளரையும்/ஒருங்கிணைப்பாளரையும் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தக் குழு, பங்கு மாமன்ற நடைமுறைகளைத் திட்டமிட வேண்டும். முதலில் எந்தெந்த குழுக்களில் கலந்துரையாடல் நடைபெற வேண்டும் என்று ஒரு பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். கலந்துரையாடலை நெறியாளுகைச் செய்ய வழிகாட்டிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு கலந்துரையாடல் நடத்தும் முறைப்பற்றி தெளிவான பயிற்சியளிக்கப்பட வேண்டும். காரணம், திருத்தந்தை நம்மை எச்சரிப்பது போன்று இக்கலந்துரையாடலில்

அ. மாமன்றத்தின் உள் அனுபவத்திற்கு இட்டுச் செல்லாமல் மேலோட்டமான ஒழுங்கு முறைகளில் மட்டும் கவனம் செலுத்துவது,

ஆ. மாமன்ற கலந்துரையாடலை வெறுமனே ஓர் அறிவுசார்க் கண்ணோட்டத்தோடு, புள்ளி விபரங்களை சேகரித்து வழங்கும் களமாகக் காண்பது,

இ. உணர்வுபூர்வமான ஈடுபாட்டிற்குச் செல்லாமல் "எல்லாம் எமக்குத் தெரிந்ததே" என்ற மேதாவித்தனத்தோடு செயல்படுதல்

போன்ற தவறுகளைத் தவிர்த்து மாமன்ற கையேடு எண்-19 கூறும் "பொதுப் பகிர்தலில் கவனத்தில் கொள்ள வேண்டியவற்றை" சரியாக கடைபிடித்து அனைவரையும் பேசவைத்துச் செவிமடுக்கும் திருஅவையாக நாம் மாற வழிவகுக்க வேண்டும். இந்த வழிகாட்டிகள் தான் கலந்துரையாடலை குழுக்களில் ஆக்கபூர்வமாக, வித்தியாசமாக, எல்லோரையும் ஈர்க்கும் விதத்தில் வழிநடத்தி அவர்கள் கூறும் கருத்துக்கள், கேள்விகள் எல்லாவற்றையும் பதிவுச் செய்ய வேண்டும். பங்கு மாமன்றக்குழு இந்த அறிக்கைகளைத் தொகுத்து பங்கு மாமன்றத்திற்கான முன்வரைவை தயாரிக்கும். அதனடிப்படையில் பங்கு அருள்பணியாளர் பங்கு மாமன்றத்தைக் கூட்டி உரையாடல் நடத்துவார். இதன் விளைவாகப் பங்கிற்கான புதிய இலட்சியக்கனவு, அடுத்துவரும் 10 ஆண்டுகளுக்கான திட்டமிடல், பங்கு அருள்பணிப் பேரவை பணிக்காலத்திற்கான திட்டமிடல் போன்றவற்றைச் செய்யலாம்.

அதே சமயம், பங்கு ஒருங்கிணைப்புக்குழு தொகுக்கப்பட்ட அறிக்கையை மறைவட்ட முதல்வர்கள் வழியாக மறைமாவட்ட மைய ஒருங்கிணைப்புக் குழுவிற்கு ஏப்ரல் 10-ம் தேதிக்குள் ஒப்படைப்பார்கள்.

**மூன்றாம் கட்டம்:-**

**மறைமாவட்ட மாமன்றம்: மே, 15, 2022**

பங்குகளிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் மறைமாவட்ட மைய ஒருங்கிணைப்புக்குழு ஓர் ஒருங்கிணைந்த அறிக்கையை உருவாக்கும். மைய ஒருங்கிணைப்புக்குழு சமர்ப்பித்த ஒருங்கிணைந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, அவற்றில் எழுப்பப்படும் கேள்விகள், கரிசனைகள், முதன்மைகளைக் கொண்டு மறைமாவட்ட மாமன்றம் ஏற்பாடு செய்யப்படும். இது நமது மறைமாவட்டம் இனிவரும் காலங்களில் எப்படி ஒரு வித்தியாசமான திருஅவையாகச் செயல்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கவும் இந்த மாறியச் சூழலில் அருள்பணிக் குழுக்கள் என்னென்ன பணிகளை ஆற்ற வேண்டும் என்பதை தெளிவுப்படுத்தவும் நிச்சயம் உதவியாக இருக்கும். இதற்கான தெளிவான திட்டமிடல் பின்னர் நடைபெறும்.

மே மாதம் 31-ம் தேதிக்குள் நமது மறைமாவட்ட கலந்துரையாடல்களின் 10 பக்கச்சுருக்கம் மாநிலத் துணைச் செயலருக்கு (Reginal Deputy Secretary) அனுப்பி வைக்கப்படும்.

**தொடர் செயல்பாடுகள்**

மாநிலத் துணைச் செயலர்கள் (RDS) தமிழக அளவிலான அறிக்கைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, 10 பக்கப் பொது அறிக்கையை இந்திய

அளவிலான மைய ஒருங்கிணைப்புக் குழுவிற்கு ஜுன் 20, 2022-க்குள் அனுப்பி வைப்பார்கள். எல்லா மறைமாவட்டங்களிலிருந்தும் பெறப்பட்ட இந்த அறிக்கைகள் அடிப்படையில் அகில இந்திய மைய ஒருங்கிணைப்புக் குழு ஜுலை 15, 2022-க்குள் இந்திய ஆயர்களுக்கான கலந்துரையாடல் முன்வரைவை சமர்ப்பிப்பார்கள். ஜுலை 31-க்குள் இந்திய ஆயர்கள் கலந்துரையாடல் நிறைவுபெறும். ஆகஸ்ட் 15, 2022-க்குள் இந்திய அளவிலான இறுதி அறிக்கையானது உரோமையில் உலக ஆயர்கள் மாமன்ற செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

**வேண்டுகோள்**

- ஆயர் மாமன்றம் 2021-2023-க்கான இறைவேண்டல் ஒவ்வொரு நாளும் திருப்பலியின் இறுதியில் வேண்டுங்கள்.
- ஒவ்வொரு குடும்பத்திலும் குடும்ப செபத்தோடு இந்த இறை வேண்டலை செபிக்கலாம்.
- அன்பியக் கூட்டங்கள், திருத்தூதுக் கழகங்கள், இயக்கங்கள், பங்கு அருள்பணிப்பேரவை கூட்டங்களின் இறுதியில் மாமன்ற இறை வேண்டலை செபிக்கலாம்.

பங்கு அருள்பணியாளர்களோடும் மறைவட்ட முதல்வர்களோடும் பிற பொதுநிலையினர் தலைவர்களோடும் ஒத்துழைத்து இம்மாமன்ற நோக்கத்தை வெற்றிபெற செய்வது நமது கடமையாகும்.

கோட்டாறு இறைமக்களாகிய நம் அனைவருக்கும் (திருநிலையினர், பொதுநிலையினர்) இ∴து ஒரு புதுப்பித்தல் அனுபவமாக நிச்சயம் அமையும் என்று நம்புகின்றேன். தூய ஆவியார் நம்மை வழிநடத்துவார். தூய ஆவியாரின் அழைப்புக்கும் வழிநடத்தலுக்கும் நம்மைக் கையளிப்போம்.

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

**+ ஆயர் நசரேன் சூசை**

கோட்டாறு மறைமாவட்டம்

---

"Do we truly realize that something is wrong in a world where there are so many farmworkers without land, so many families without a home, so many laborers without rights, so many persons whose dignity is not respected?"

- Pope Francis

